## (ஐ) தொழில்நிலையும் தொழில் உறவுகளும்

### பொழிப்பு

சகல பொருளியற்றுறைகளையும் சார்ந்த தொழில்நிலைபற்றிய புள்ளிவிவரங்கள், குடிசன மதிப்பு அறிக்கைகளிலிருந்து குடிசனமதிப்பு ஆண்டுகளுக்கும், மாதிரி அளவைகளிலிருந்து சில தேர்ந்தெடுக்கப்பட்ட ஆண்டுகளுக்கும் மட்டும் கிடைக்கக்கூடியனவாக உள்ளன. தொடர்ச்சியான அடிப்படையில் விவரங்கள் இல்லாதமையினுல், நடைமுறைத் தொழில்நிலைபற்றி ஆய்வதற்கு இங்கு எத்தனிக்கப்படவில்லை.

தொழிலிணைப்புத் தலங்களாலே தொழிலில் அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 1967ற்குரிய 4,254ல் இருந்து 1968ல் 5,729 உக்கு அதிகரித்தது. இவ்வெண் தொகைகளிலே தாமாகத் தொழில் தேடிக்கொண்டவர்களின் எண்ணிக்கை சேர்க்கப்படவில்லையென்பதோடு, அவை நாட்டிலுள்ள தொழில்நிலை நிலைமைகளையும் பிரதிபலிப்பலனவல்ல.

மத்திய வங்கியானது, அரசாங்கத் திணைக்களங்கள் அரசாங்கச் சார்புடைய நிலையங்கள் (பொதுக் கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி நிலையங்கள், சபைகள் முதலியன) உட்பட்ட பொதுத் துறையிலுள்ள தொழில்நிலைபற்றி ஆண்டுதோறுமான ஓரளவையை நடாத்தி வருகிறது. இவ்வளவையின்படி, இவ்வளவைக்குட்பட்ட அரசாங்கத் திணைக்களங்களிலும், அரசாங்கச் சார்புடைய நிலையங்களிலுமுள்ள தொழில்நிலையில் ஒரு பொதுவான அதிகரிப்புக் காணப்பட்டது. மொத்த அதிகரிப்பு, அரசாங்கத் திணைக்களங்களில் 2.9 சதவீதமாகவும், அரசாங்கச் சார்புடைய நிலையங்களில் 14.1 சதவீதமாகவும் இருந்தது. அரசாங்கத் துறையிற் கணிசமான அதிகரிப்புக்கள், காணி அபிவிருத்தி, கமத்தொழிற் சேவைகள், வன பரிபாலனம் ஆகிய திணைக்களங்களிற் பதிவு செய்யப்பட்டன. இத்திணைக்களங்களிலேற்பட்ட சதவீத அதிகரிப்புக்கள் முறையே, 13.0, 8.6, 5.6 சதவீதங்களாகும்.

அரசாங்கச் சார்புத் துறையிலே தொழில்நிலையிற் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் தேசிய பொறியியற் கூட்டுத்தாபனத்தில் 23.7 சதவீதமும், ஆற்றுப்பள்ளத்தாக்குகள் அபிவிருத்தி சபையில் 11.8 சதவீதமும் காணப்பட்டன. இவ்வதிகரிப்புக்கள், கூட்டுத்தாபனங்களில் ஏற்பட்ட விரிந்த முதலீட்டத் தொழிற்பாடுகளைப் பிரதிபலிக்கின்றன.

அளவை, ஊழியர்களை நான்கு தொகுதிகளாகப் பகுத்துள்ளது. (1) நிருவாக, தொழில்நுட்ப பயில்தொழில்கள் (2) பணிச் சேவைகள் (3) சிறுசேவைகள் (4) ஏனையவை (அட்டவணை II (ஐ) 2ஐப் பார்க்கவும்). அரசாங்கத் திணைக்களங்களின் வேலைநிலையில் ஏற்பட்ட மொத்த அதிகரிப்பில் ஏறக்குறைய 55 சதவீதமானவை பணிச் சேவைகளிலும் 31 சதவீதமானவை சிறுசேவைகளிலும் 9 சதவீதமானவை நிருவாக, தொழில்நுட்ப பயில் தொழில்களிலும் காணப்பட்டன. அரசாங்கச் சார்புத் துறையில் இவ்வீத சமங்கள் வேறுபாடாகவிருந்தன. இத்துறையில் 70 சதவீதமான அதிகரிப்பு சிறுசேவை ஊழியர்களிலும், 18 சதவீதமானவை பணிச் சேவை ஊழியர்களிலும், 6 சதவீதமானவை நிருவாக,தொழில்நுட்பப் பயில்தொழில் ஊழியர்களிலும் காணப்பட்டன.

தனியார் துறைக் கைத்தொழில்களிலுள்ள வேலைநிலை சம்பந்தமாக, கைத்தொழில் உற்பத்திபற்றிய மத்திய வங்கியினுல் நடாத்தப்பட்ட அளவையின்படி (இது விவரமாக, அவ்வறிக்கையில் II 'ஆ' என்னும் பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளது). இதற்குட்பட்ட நிறுவனங்களின் மொத்த வேலைநிலை 1967 இற்குரிய 74,000 இலிருந்து 1968ல் 1,01,000 இற்கு அதிகரித்தது. இவ்வதிகரிப்பாகிய 27,000 அல்லது 36 சதவீதம் ஓரளவில் இவ்வளவைக்

குட்படுத்தப்பட்ட கைத்தொழிலின் எண்ணிக்கை அதிகரித்தமையினாலும், இன்னொரு வகையிற் கைத்தொழிற் கூட்டுத்தாபனங்களிலேற்பட்ட அதிகரிப்பினாலும் ஏற்பட்டதாகும். ஆயினும் இவ் வெண்தொகைகள் தனியார் துறைக் கைத்தொழில்களிலுள்ள வேலைநிலை அதிகரித்ததென்பதைக் குறிப்பனவல்ல.

தொழிலிணைப்பு நிலையங்களில் தொழில் நாடி அல்லது சிறந்த தொழில் நாடிப் பதிவுசெய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 1968ல் 6.9 சதவீதத்தால் அதிகரித்தது; இது முந்திய ஆண்டிலேற்பட்ட 7.6 சதவீத அதிகரிப்பிலும் பார்க்கக் குறைவானதாகும். பதிவுபெற்றோர் நாலு பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளனர். (அ) தொழில்நுட்ப எழுதுவினைஞர் (ஆ). பயிற்சி பெற்றோர் (இ) ஓரளவு பயிற்சி பெற்றோர் (ஈ) பயிற்சி பெறுதோர். இதில் மிகக் கூடிய 10.3 சதவீதமான அதிகரிப்பு பயிற்சி அற்றோர் தொகுதியிலேயே காணப்பட்டது. 1968ல் பதிவுசெய்யப்பட்டோரின் மொத்த எண்ணிக்கையில் 37.8 சதவீதமானோர் பயிற்சியற்றோராக உள்ளனர்.

1968ல் தனியார் துறையிலுள்ள தொழிலுறவு நிலைமைகள், வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கையினால் அளவிடப்பட்டபடி, சென்ற ஆண்டினதிலும்பார்க்க சிறந்ததாக இருந்தன. 1967ம் ஆண்டின் 230 வேலைநிறுத்தங்களுடன் ஒப்பிடுகையில், 1968ல் 166 வேலைநிறுத்தங்கள் மட்டுமே இருந்தன. இதில் ஈடுபட்ட வேலையாட்களின் எண்ணிக்கையும் சென்ற ஆண்டினதிலும் பார்க்கக் குறைவானதாகும். எனினும் இழக்கப்பட்ட ஆள்-வேலை நாட்களின் மொத்த எண்ணிக்கை சென்ற ஆண்டினதிலும்பார்க்கக் கூடுதலாக இருந்தது. தேயிலைப் பெருந்தோட்டங்கள், கொழும்புத் துறைமுகம் ஆகியவற்றில் ஏற்பட்ட வேலைநிறுத்தங்களே இழக்கப்பட்ட ஆள்-வேலை நாட்களின் எண்ணிக்கை அதிகரிப்பிற்குப் பிரதான காரணமாகும். வேலைநிறுத்தங்களுக்குப் பிரதான காரணங்கள், வேலைநீக்கங்கள் அல்லது வேலையிழப்பே ஆகும். கிட்டத்தட்ட மூன்றிலொரு வேலைநிறுத்தங்களுக்கும் இவையே காரணங்களாக இருந்தன.

1968 நவெம்பரில் அரசாங்க ஊழியர்களில் ஒரு பகுதியினர் வேலை நிறுத்தம் செய்தனர். கிட்டத்தட்ட நான்கு வாரங்களுக்கு நீடித்த இவ்வேலை நிறுத்தம் சம்பள அதிகரிப்புக் கோரிக்கையிலிருந்தே பிரதானமாக எழுந்தது.

### தொழிலிலமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை

தொழிலிணைப்பு நிலையத்தினால் தொழிலிலமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை மறுபக்கமுள்ள அட்டவணை II (ஐ) 1 இலே தரப்பட்டுள்ளது. தொழிலிலமர்த்தப்பட்ட 5,729 கொண்ட மொத்த ஆட்களில் 13.3 சதவீதம் தொழில்நுட்ப எழுதுவினைஞர்களையும், 14.0 சதவீதம் பயிற்சிபெற்றோரையும், 13.7 சதவீதம் ஓரளவு பயிற்சிபெற்றோரையும், 5.90 சதவீதம் பயிற்சிபெறுதோரையும் உள்ளடக்கியதாகும். தொழில் நாடிப் பதிவுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கையிலே தொழிலிலமர்த்தப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 2.1 சதவீதமாகும். 1967இற்குரிய தொடர்பான எண்தொகை 1.7 சதவீதமாகும்.

## அட்டவணை II (ஐ) 1

### தொழிலிலமர்த்தப்பட்டோரின் மொத்த எண்ணிக்கையும், ஒவ்வொரு பகுப்பிலும் பதிவுசெய்யப்பட்டோரின் மொத்தத் தொகையில் அவர்களின் தொடர்பான முக்கியத்துவமும்

| | நுட்பம், எழுதுவினைஞர் | | பயிற்சி பெற்றோர் | | ஓரளவு பயிற்சி பெற்றோர் | | பயிற்சி பெருதோர் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அமர்த்தப்பட்டோர் எண்ணிக்கை | பகுப்பினுள்பதிவுசெய்யப்பட்டோரின் சதவீதமாக | அமர்த்தப்பட்டோர் எண்ணிக்கை | பகுப்பினுள்பதிவுசெய்யப்பட்டோரின் சதவீதமாக | அமர்த்தப்பட்டோர் எண்ணிக்கை | பகுப்பினுள்பதிவு செய்யப்பட்டோரின் சதவீதமாக | அமர்த்தப்பட்டோர் எண்ணிக்கை | பகுப்பினுள் பதிவுசெய்யப்பட்டோரின் சதவீதமாக | அமர்த்தப்பட்டோர் எண்ணிக்கை | பகுப்பினுள் பதிவு செய்யப்பட்டோரின்சதவீதமாக |
| 1958 | ... 1,827 | 9.2 | 810 | 5.9 | 1,006 | 3.1 | 2,251 | 4.4 | 5,884 | 5.0 |
| 1959 | ... 1,667 | 8.0 | 1,045 | 7.5 | 1,275 | 3.8 | 3,218 | 5.4 | 7,205 | 5.6 |
| 1960 | ... 1,400 | 5.3 | 771 | 4.6 | 1,247 | 3.6 | 4,744 | 6.5 | 8,162 | 5.4 |
| 1961 | ... 1,259 | 4.6 | 631 | 3.5 | 964 | 2.8 | 2,794 | 3.9 | 5,648 | 3.7 |
| 1962 | ... 1,263 | 3.7 | 468 | 2.7 | 809 | 2.3 | 2,315 | 3.5 | 4,857 | 3.2 |
| 1963 | ... 1,322 | 3.7 | 502 | 3.0 | 836 | 2.3 | 2,466 | 3.9 | 5.129 | 3.4 |
| 1964 | ... 1,722 | 4.4 | 535 | 3.2 | 945 | 2.5 | 3,599 | 5.5 | 6,801 | 4.3 |
| 1965 | ... 1,495 | 2.7 | 846 | 4.2 | 1,035 | 2.1 | 3,753 | 5.0 | 7,129 | 3.6 |
| 1966 | ... 1,056 | 1.6 | 740 | 3.4 | 917 | 1.5 | 4,089 | 4.5 | 6,802 | 2.9 |
| 1967 | ... 1,018 | 1.4 | 588 | 2.5 | 712 | 1.1 | 1,936 | 2.1 | 4,254 | 1.7 |
| 1968* | ... 759 | 1.0 | 803 | 3.2 | 785 | 1.1 | 3,382 | 3.3 | 5,729 | 2.1 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

*தற்காலிகமானவை

### அரசாங்கத் துறையிலே தொழில்நிலை

1968இற்குரிய மத்திய வங்கி அளவை, அதிக எண்ணிக்கையான அரசாங்க, அரசாங்கச் சார்பான நிலையங்களிலிருந்து சென்ற ஆண்டுகளிலும் பார்க்க மிக விவரமான தகவல்களைக் கோரியது. வங்கியானது 89 அரசாங்கத் திணைக்களங்களிலிருந்தும், 46 அரசாங்கச் சார்பு நிலையங்களிலிருந்தும் விவரங்களைப் பெற்றது. விசாரணைக்கு மறுமொழி அளிக்காத திணைக்களங்களுக்கான எண்தொகைகள், 1967/68, 1968/69இற்கான அரசாங்க அரசிறை செலவு மதிப்பீடுகளிற் கொடுக்கப்பட்டுள்ள ஆளணித் தகவலிலிருந்து முடிந்தளவில் மதிப்பிடப்பட்டுள்ளன.

அவையினுள் உள்ளடக்கப்பட்ட அரசாங்கத் திணைக்களங்களின் 1967, 1968 இறுதியிலுள்ள தொழில்நிலைபற்றிய விவரங்கள் பின்வரும் பகுப்புக்களின்கீழ் வகுத்து பின்வரும் அட்டவணை காட்டுகிறது. (1) நிருவாக, நுட்பப் பயில்தொழில் அலுவலாளர்கள், (2) பணிச் சேவை ஊழியர்கள், (3) சிறுசேவை ஊழியர்கள், (4) ஏனையவை (அட்டவணையின் அடியிலுள்ள குறிப்புக்களைப் பார்க்கவும்).

அட்டவணை II (ஐ) 2

## தொழில்நிலைபற்றிய புள்ளிவிவரங்கள்—அரசாங்கத் திணைக்களங்கள்

| தொழிற் பகுப்பு | தரமும் தொழிலிலமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கையும் | | | | | | | | 1967ல் இருந்து சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நிரந்தரம் | | தற்காலிக | | அமய | | மொத்தம் | | |
| | 1967 | 1968 | 1967 | 1968 | 1967 | 1968 | 1967 | 1968 | |
| 1. நிருவாக, நுட்ப, பயில் தொழில் உயர்பதவி அலுவலாளர் | 5,822 | 6,288 | 299 | 331 | 16 | 15 | 6,137 | 6,634 | +8.1 |
| 2. பணிச்சேவை ஊழியர் | 83,005 | 85,800 | 1,367 | 1,317 | 736 | 865 | 85,108 | 87,982 | +3.4 |
| 3. சிறுசேவை ஊழியர் | 78,279 | 79,193 | 2,230 | 2,425 | 6,766 | 7,271 | 87,275 | 88,889 | +1.8 |
| 4. ஏனையவை | 3,846 | 4,132 | 309 | 234 | 399 | 456 | 4,554 | 4,822 | +5.9 |
| மொத்தம் | 170,952 | 175,413 | 4,205 | 4,307 | 7,917 | 8,607 | 183,074 | 188,327 | +2.9 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

குறிப்புகள்: 1. (i) சட்டவாக்க அலுவலர்களும், அரசாங்க நிர்வாகிகளும்.
(ii) முகாமையாளர், தலைவர், ஏனைய உயர்பதவி தர அலுவலர்கள்.
(iii) விஞ்ஞானிகள், தொழில்நுட்பலாளர்கள், பொறியியலாளர், வைத்தியர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், கணக்காளர்கள், மதிப்பாளர்கள்.

2. (i) எழுதுவினைஞர் தரங்கள், சிறுப்பர்கள், சுருக்கெழுத்தாளர்கள், தட்டெழுத்தாளர்கள், சைபர் எந்திர இயக்குநர்கள்.
(ii) தொலைபன்னியலுவலர்கள், அலுவலக எந்திர இயக்குநர்கள், மொழிபெயர்ப்பாளர்கள், நீடிப்புப் பரிசோதகர்களும் விசாரசணை அலுவலர்களும், பொலிசு, கிராமசேவகர்கள்.
(iii) களஞ்சியக் காப்பாளர்கள்.

3. (i) பணிவிடையாளர்கள், அலுவலகச் சிறுசேவை ஊழியர்கள், கையாளர்களும், பணிமுறைத் துணைவர்களும், சாரதிகள் (மோட்டார் வாகனங்கள், லொறிகள் முதலிய), பயிற்சிபெறாத வேலையாட்கள், ஓரளவு பயிற்சி பெற்ற வேலையாட்கள்.
(ii) பயிற்சி பெற்ற வேலையாட்கள்.

மேலுள்ள அட்டவணை, 1968ல் அளவையினுல் உட்படுத்தப்பட்ட அரசாங்கத் திணைக்களங்களிலுள்ள ஊழியர்களில் 93 சதவீதமானோர், பணிச்சேவை, சிறுசேவை தரங்களிலுமிருக்க, நிருவாக, தொழில்நுட்ப பயில் தொழிலில் 3 சதவீதம் மட்டுமே இருந்தனர் என்பதைக் காட்டுகின்றது. பணிச் சேவை சிறுசேவைத் தரங்களுக்கான சமவீதங்கள் முறையே 46.7 சதவீதமும், 47.2 சதவீதமுமாகும். 1968 இறுதியில் ஊழியர்களில் 93.1 சதவீதம் நிரந்தரமும், 2.3 சதவீதம் தற்காலிகமும், 4.6 சதவீதம் அமையவுமானவர்களாகும்.

அளவையினுல் உள்ளடக்கப்பட்ட அரசாங்கத் திணைக்களங்களிலுள்ள ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 1967 இறுதியின் 1,83,074 இலிருந்து 1968 இறுதியில் 1,88,327இற்கு அதிகரித்துள்ளது. இவ்வதிகரிப்பில், 54.7 சதவீதம் பணிச் சேவைப் பகுப்பிலும், 30.7 சதவீதம் சிறுசேவைப் பகுப்பிலும், 9.5 சதவீதம் நிருவாகம், தொழில்நுட்ப, பயில்தொழில் பகுப்பிலுமாகும்.

பின்வரும் அட்டவணை 1967, 1968 இறுதியில் அரசாங்கச் சார்பு நிலையங்களிலுள்ள தொழில்நிலையைக் காட்டுகின்றது.

### அட்டவணை II (ஐ) 3

தொழில்நிலைபற்றிய புள்ளிவிவரங்கள்—அரசாங்கச் சார்புடைய நிலையங்கள்

| தொழிற் பகுப்பு | தரமும் தொழிலிலமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கையும் நிரந்தரம் 1967 | நிரந்தரம் 1968 | தற்காலிகமாக 1967 | தற்காலிகமாக 1968 | அமைய 1967 | அமைய 1968 | மொத்தம் 1967 | மொத்தம் 1968 | 1967 ல் இருந்து சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. நிருவாக, நுட்ப, பயில்தொழில் உயர் பதவி அலுவலாளர் | 3,177 | 4,024 | 235 | 345 | — | 13 | 3,412 | 4,382 | +28.4 |
| 2. பணிச்சேவை ஊழியர்கள் ... | 19,415 | 22,229 | 718 | 824 | 261 | 280 | 20,394 | 23,333 | +14.4 |
| 3. சிறுசேவை ஊழியர்கள் ... | 67,937 | 73,531 | 3,138 | 3,536 | 16,372 | 21,675 | 87,447 | 98,742 | +12.9 |
| 4. ஏனையவை ... | 2,347 | 3,118 | 23 | 25 | 216 | 306 | 2,586 | 3,449 | +33.4 |
| மொத்தம் ... | 92,876 | 102,902 | 4,114 | 4,730 | 16,849 | 22,274 | 113,839 | 126,906 | +14.1 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

அட்டவணை II (ஐ) 2 உக்குரிய குறிப்புக்கள்
இதற்கும் அமையும்.

விசாரணைக்கு மறுமொழி அளித்த 46 அரசாங்கச் சார்புடைய நிலையங்களில் பணிச் சேவை, சிறுசேவை ஊழியர்கள் மொத்த ஊழியர்களில் முறையே 18.0 சதவீதம் 76.0 சதவீதத்தைக் கொண்டிருந்தனர். நிருவாக, தொழில்நுட்ப, பயில்தொழில் ஊழியர்களின் சமவீதம் 3.4 சதவீதமாகும். 1968 இறுதியில் ஊழியர்களின் 79.2 சதவீதம் நிரந்தரமாகவும், 3.6 சதவீதம் தற்காலிகமாகவும், 17.1 சதவீதம் அமையமாகவும் உள்ளனர். அரசாங்கச் சார்புடைய 46 நிலையங்களிலுள்ள தொழில்நிலை 16,067ஆல் 1,29,906உக்கு அதிகரித்துள்ளது. இவ்வதிகரிப்பில் 70.3 சதவீதம் சிறு சேவை ஊழியர்களையும், 18.3 சதவீதம் பணிச் சேவை ஊழியர்களையும் 6.0 சதவீதம் நிருவாக, தொழில்நுட்ப பயில்தொழில் ஊழியர்களையும் கொண்டதாகும். உள்ளடக்கப்பட்ட சகல அரசாங்கச் சார்புடைய நிலையங்களுக்குமான சதவீத அதிகரிப்பு 14.1 சதவீதமாகும். குறிப்பிடத்தக்களவு அதிகரிப்புக்கள், 23.7 சதவீதம் தேசிய பொறியியற் கூட்டுத்தாபனத்தினுலும், 11.8 சதவீதம் ஆற்றுப்பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச் சபையினுலும் அறியத்தரப்பட்டுள்ளன.

### தொழில் நாடிப் பதிவுபட்டோர்

1968ல் தொழில் நாடி அல்லது சிறந்த தொழில் நாடித் தொழிலிணைப்பு நிலையத்திற் பதிவுபட்டோரின் எண்ணிக்கை 6.9 சதவீதத்தால் அதிகரித்துள்ளது (பின்னிணைப்பு அட்டவணை 45ஐப் பார்க்கவும்). முந்திய ஆண்டிற்கான அதிகரிப்பு 7.6 சதவீதமாகும். வெவ்வேறு பகுப்புகளுக்கான அதிகரிப்புகள், தொழில்நுட்ப, எழுதுவினைஞரில் 3.7 சதவீதமும், பயிற்சிபெற்றோரில் 5.7 சதவீதமும், ஓரளவு பயிற்சிபெற்றோரில் 6.1 சதவீதமும், பயிற்சிபெருதோரில் 10.3 சதவீதமுமாகும். முந்திய ஆண்டிற்னாக ஒப்பியல்பான எண்தொகைகள் முறையே 9.9, 8.9, 10.9, 3.5 சதவீதங்களாகும்.

தொழில் உறவுகள்[1]

*1968ல்* தனியார் துறையிலேற்பட்ட வேலைநிறுத்தங்களின் மொத்த எண்ணிக்கையும் அவற்றில் ஈடுபட்ட வேலையாட்களின் தொகையும், முந்திய ஆண்டின் தொடர்பான எண்தொகைகளிலும்பார்க்கக் குறைவானவையாகும். *1967ல் 89,851* வேலையாட்கள் ஈடுபட்ட *230* வேலைநிறுத்தங்களுக்கெதிராக, *1968ல் 64,810* வேலையாட்கள் ஈடுபட்ட *166* வேலைநிறுத்தங்கள் நடைபெற்றன. கிட்டத்தட்ட *88* சதவீத வேலைநிறுத்தங்கள் பெருந்தோட்டங்களில், பிரதானமாகத் தேயிலைப் பெருந்தோட்டங்களில் ஏற்பட்டவையாகும். இவை ஈடுபட்ட வேலையாட்களின் மொத்த எண்ணிக்கையில் *86* சதவீதத்திற்கு வகை கூறின. *1968* நவெம்பரில் அரசாங்க ஊழியர்களின் ஒரு பகுதியினது வேலைநிறுத்தமும் நாலு வாரங்கள் நீடித்தது. இவ்வேலைநிறுத்தம் பிரதானமாகச் சம்பள உயர்வுக் கோரிக்கையிலிருந்து எழுந்ததாகும்.

அட்டவணை *II* (ஐ) *4*, தனியார் துறை வேலைநிறுத்தங்களின் விளைவால், ஏற்பட்ட வேலைநிறுத்தங்கள், ஈடுபட்ட வேலையாட்கள், இழக்கப்பட்ட ஆள்-வேலைநாட்கள் ஆகியவற்றைக் காட்டுகிறது.

### அட்டவணை *II* (ஐ) *4*

#### தனியார் துறை வர்த்தகங்களில் வேலை நிறுத்தநிலை

| ஆண்டு | பெருந்தோட்டங்கள் | | | ஏனைய தொழில் | | |
|---|---|---|---|---|---|---|
| | வேலைநிறுத்தங்களின் எண்ணிக்கை | பங்குபற்றிய வேலையாட்கள் | இழந்த ஆள்வேலை நாட்கள் | வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை | பங்குபற்றிய வேலையாட்கள் | இழந்த ஆள்வேலை நாட்கள் |
| 1956 ... ... | ... 99 | 56,908 | 200,888 | 115 | 31,852 | 152,966 |
| 1957 ... ... | ... 177 | 297.061 | 618,050 | 127 | 70,239 | 190,443 |
| 1958 ... ... | ... 123 | 39,372 | 340,632 | 96 | 42,713 | 399,228 |
| 1959 ... ... | ... 177 | 47,318 | 352,095 | 71 | 42,453 | 460,141 |
| 1960 ... ... | ... 123 | 42,528 | 259,948 | 37 | 4,839 | 15,139 |
| 1961 ... ... | ... 90 | 29,223 | 317,866 | 39 | 38,013 | 170,372 |
| 1962 ... ... | ... 138 | 42,569 | 193,792 | 550 | 25,730 | 801,882 |
| 1963 ... ... | ... 174 | 62,511 | 359,905 | 58 | 21,819 | 479,678 |
| 1964 ... ... | ... 201 | 68,009 | 611,060 | 103 | 21,400 | 274,623 |
| 1965 ... ... | ... 175 | 70,929 | 482,259 | 55 | 10,085 | 89,952 |
| 1966 ... ... | ... 132 | 138,259 | 4,117,264 | 32 | 4,592 | 34,351 |
| 1967 ... ... | ... 194 | 74,968 | 414,636 | 36 | 14,883 | 284,709 |
| 1968* ... ... | ... 146 | 55,817 | 608,276 | 20 | 8,993 | 210,706 |

மூலம்: தொழிற்றிணைக்களம்.

*' தற்காலிகமானவை.

1. இவ்வறிக்கை எழுதும் நேரத்தில், இவ்வாண்டுபற்றிக் கிடைக்கக்கூடியதாயிருந்த வேலை நிறுத்தங்கள், இழக்கப்பட்ட ஆள் வேலைநாட்கள்பற்றிய எண்தொகைகள் தற்காலிகமானவையாகும்.

வேலைநிறுத்தம் காரணமாக இழக்கப்பட்ட ஆள்-வேலைநாட்களின் மொத்த எண்ணிக்கை 6,99,345 இலிருந்து 8,18,982 இற்கு அதாவது 17.1 சதவீதத்தால் அதிகரித்தது. 1968ம் ஆண்டிற்கான மொத்த எண்தொகையில் தேயிலைப் பெருந்தோட்டங்களில் இழக்கப்பட்ட ஆள்-வேலைநாட்கள் மட்டும் 70 சதவீதமாக விளங்கிற்று. கொழும்புத் துறைமுகம், தேயிலையொடு இரப்பர் பெருந்தோட்டங்கள் ஆகியவற்றிலும் குறிப்பிடத்தக்களவு இழப்புகள் காணப்பட்டன. இவை இழக்கப்பட்ட மொத்த ஆள்-வேலைநாட்களில் முறையே 10.2 சதவீதத்திற்கும், 3.7 சதவீதத்திற்கும் வகைகூறின.

1968ன் வேலைநிறுத்தங்களுக்குரிய அடிப்படைக் காரணங்கள்பற்றிய பகுப்பாய்வு, வேலைநிறுத்தங்களின் 31.3 சதவீதமானவை வேலைநீக்கங்கள் அல்லது வேலை இழப்பினுல் ஏற்பட்டனவென்பதைக் காட்டுகின்றது. நிருவாக விதிகள், வேலை ஒழுங்குகள் என்பனவற்றிலிருந்து எழும் கருத்து வேறுபாடுகள் காரணமான வேலைநிறுத்தங்கள், மொத்த வேலைநிறுத்தங்களில் 22.3 சதவீதமானவைக்கும், பொதுவான கோரிக்கைகள் 10.8 சதவீதமானவைக்கும் வகைகூறின.